பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 23 வெள்ளிக்கிழமை (09-10-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 316

## ஆனையிறவு போக்குவரத்துப் பாதையை தாக்குதலற்ற பகுதியாக அரசு அறிவிப்பு!

கொழும்பு, அக். 9

ஆனையிறவுப் பாதையை ''தாக்குதல் தவிர்த்த வலய'' மாக (No Fire Zone) அரசாங்கம் அறிவித்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த விசேட அறிக்கையில்—

மனிதாபிமானக் காரணங்களுக்காகவும் பொதுமக்களின் வசதி மற்றும் பாதுகாப்புக்காகவும், பாதுகாப்புப் படையினர் ஆனையிறவுப் பாதையை போக்குவரத்துக்குத் திறந்துவிட முடிவு செய்துள்ளார்கள் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழியாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் எதுவும் நடத்தப்படமாட்டாது — என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல்களை ஆரம்பிக்கும்போது மக்களின் வசதியையும் பாதுகாப்பையும் கவனத்துக்கு எடுத்துக்கொள்கின்றனர்.

### ஆஸ்பத்திரி

பொதுமக்களின் வசதிக்காகவும் மனிதாபிமான அடிப்படையிலும் யாழ். போதனா வைத்தியசாலையை இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் படையினர் மேற்கொண்டனர்.

இந்த வைத்தியசாலையின் காயமடைந்த

[5 ஆம் பக்கம் பார்க்க]

# கிளாலி கடலில் பயணிகள் மீது படையினர் சூடு! ஏழு பேர் பலி!!

## நேற்று அதிகாலை பயங்கரம்

யாழ்ப்பாணம், அக்டோபர் 9

கிளாலி சூரமுனங்கு கடற் பிராந்தியத்தில் வைத்து நேற்று அதிகாலை பொதுமக்கள் பயணம் செய்த படகுகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் உயிரிழந்ததாக அஞ்சப்படுகிறது; கடலில் பாய்ந்து தப்ப முயன்ற மற்றும் இருவர் காணாமற் போயுள்ளனர்.

அவர்களும் உயிரிழந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது; இரு படகுகளும் படையினரிடம் சிக்கின.

இந்தச் சம்பவத்தில் சூட்டுக் காயங்களுக்கு இலக்கான படகோட்டியும் அவரது உதவியாளரும் கடலில் பாய்ந்து தப்பி ஒருவாறு நீந்திக் கரை சேர்ந்தனர்; மற்றொரு படகின் படகோட்டிகள் இருவர் காயம் ஏதுமின்றி கடலில் பாய்ந்து தப்பினர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்று அதிகாலை 3 மணியளவில் 21 பயணிகளுடன் வந்ததாகக் கூறப்படும் படகு ஒன்றை நோக்கி குடாக்கடல் பகுதியில் இரு படகுகளில் தரித்து நின்ற கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

எனினும் அப்படகின் படகோட்டி படகை சமயோசிதமாகத் திசை திருப்பி கடற்படையினரின் பிடிக்குள் சிக்காமல் விலகித் தப்பி, படகை கிளாலிக் கரைக்கு கொண்டு வந்து சேர்த்தார்.

இதற்கு பின்னால் வந்த படகில், படகோட்டிகள் இருவரும் பயணிகள் ஏழு பேரு

[5 ஆம் பக்கம் பார்க்க]

## சூட்டுகாயத்துடன் பாய்க்குள் ஒளித்திருந்து தப்பினேன்!

### உதவிப் படகோட்டியின் அனுபவம்

யாழ்ப்பாணம், அக். 9

''படையினரின் சூடு என் மீது விழுந்ததும் காயத்துடன் படகின் அணியத்துக்குள் நுழைந்து பாய் படங்கினால் என்னைப் போர்த்தி மறைத்துக் கொண்டேன்; பின்னர் படையினர் எமது படகைக் கட்டி இழுத்துச் சென்றபோது சாதுரியமாக கடலில் பாய்ந்து தப்பினேன்.''

இவ்வாறு நேற்று அதிகாலை கிளாலியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயத்துடன் தப்பிய உதவிப் படகோட்டி சுப்பிரமணியம் மகேந்திரன் (வயது 18) தெரிவித்தார்.

அவர் 'உதயன்' செய்தியாளரிடம் மேலும் கூறியதாவது:-

படையினர் படகு எம்மை நெருங்கி வந்து வேட்டுக்களைத் தீர்த்தபோது எனது காலில் சூடு விழுந்தது.

அப்போது படகோட்டியான எனது அண்ணனும் படகில் வந்த மற்றைய இரு ஆண்களும் கடலில் பாயும் சத்தம் கேட்டது.

### பாய்க்குள் மறைந்து கிடந்தேன்

நான் காயத்துடன் படகின் அணியத்துக்குள் இறங்கி,

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 6 மீனவர்கள் விடுவிப்பு

கொழும்பு, அக். 9

மாலைதீவு கடற் பிராந்தியத்தில் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 இலங்கை மீனவர்களை மாலைதீவு அரசு நேற்று விடுவித்தது.

ஜனாதிபதி பிரேமதாசா மாலைதீவுக்கு விஜயம் செய்ய இருப்பதையொட்டி ஒரு நல்லெண்ண நடவடிக்கையாகவே மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம், மீனவர்களை விடுவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-10]

### பெண்களும் வயோதிபரும் சிறுவனும்

## "ஐயோ சுடாதீர்கள், சுடாதீர்கள்" என கூக்குரலிட்ட போது சூடுகள் விழுந்தன

### அடுத்தடுத்து வேட்டுகள் தீர ஓலமிட்டவர்களின் சத்தம் அடங்கியது

யாழ்ப்பாணம், அக். 9

''எமது படகை நெருங்கி வந்த படையினர் திடீரென வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கினர். நான் காயத்துடன் கடலில் பாய்ந்தேன்.

''படகிலிருந்த மூன்று பெண்களும் வயோதிபரும் மற்றைய சிறுவனும் 'ஐயோ சுடாதீர்கள்! சுடாதீர்கள்!!'' என்று கூக்குரலிட்டனர்; எனினும் படையினர் விடாது துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

''சுமார் இரு நிமிட நேரம் துப்பாக்கிச் சூடுகள் தொடர்ந்தன. அதன் பின்னர் படகில் கூக்குரலிட்டவர்களின் சத்தம் அடங்கியது.''

— இப்படிக் கூறினார் கிளாலி கடற்பகுதியில் நேற்று படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகித் தப்பிய படகோட்டி சுப்பிரமணியம் ஜெயேந்திரன் (வயது 21).

பருத்தித்துறை துறைமுகப் பகுதியைச் சேர்ந்த இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### வெற்றிலை வியாபாரிகள்

நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவம் குறித்து அவர் 'உதயன்' செய்தியாளரிடம் கூறியதாவது:-

நேற்று அதிகாலை மூன்று பெண்களும், ஒரு வயோதிபரும், எட்டு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவனும் மற்றும் இரு ஆண்களும் ஒன்றாகச் சேர்ந்து வந்து எமது படகை வாடகைக்கு அமர்த்தினார்கள். வெற்றிலை வியாபாரிகளான அவர்கள் வெற்றிலைக் கட்டுகளுடன் வந்து படகில்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ஜெனரல் வைத்யா கொலை

## இரு எதிரிகளும் இன்று தூக்கில்!

புதுடில்லி, அக். 9

இந்திய முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஏ. எஸ். வைத்யாவைக் கொலை செய்தது சம்பந்தமான வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களான ஹர்ஜிந்தர்சிங்கும் (ஜிந்தாவும்), சுக்தேவ்சிங்கும் (சுக்லாவும்) இன்று புனாவில் தூக்கிலிடப்படவுள்ளனர்.

இவர்களது மரண தண்டனையை நிறுத்திவைக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை இந்திய உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

தூக்குத் தண்டனை இன்று நிறைவேற்றப்பட்டதும் இந்தியாவில் பரவலாக வன்செயல்கள் வெடிக்கலாம் என்ற அச்சத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது சகாக்கள் தூக்கிலிடப்படுவதால் ஆத்திரமடையும் சீக்கியத் தீவிரவாதிகள் வன்முறையில் ஈடுபடலாம் என அஞ்சப்படுகிறது.

ஜெனரல் ஏ. எஸ். வைத்யா 1986 ஆம் ஆண்டு புனாவில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. (உ-10)

### ம. எண்ணெய், மருந்து மற்றும்

## உணவுப் பொருள்களுடன் இன்று 'குமாரி' வருகிறது

### தபாலும் எடுத்து வரப்படுகிறது

யாழ்ப்பாணம், அக். 9

இன்று மாலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமாரி' கப்பலில் யாழ்ப்பாணம், மன்னார் செயலகங்களுக்கு உணவுப்பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு 205 மெற்றிக் தொன் அரிசி, இரண்டாயிரம் மெற்றிக் தொன் மா, 200 மெற்றிக் தொன் சீனி மற்றும் 2.5 மெற்றிக் தொன் தீப்பெட்டி, 152 பரல் மண்ணெண்ணெய், சவர்க்காரம், ரின்மீன் ஆகியன உட்பட 2 ஆயிரத்து 492 மெற்றிக் தொன் பொருள்களும்—

547 தபால் பொதிகளும், யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்து வகைகளும் எடுத்துவரப்படுகின்றன.

மன்னாருக்கான பொருள்கள் அதே கப்பலில் [illegible] எடுத்துச்செல்லப்[illegible] (ஓ-8)

## அடிக்கடி ஹெலி தரையிறக்கம்

தென்மராட்சி, அக். 9

ஆனையிறவு, பூநகரி முகாம்களில் கடந்த இரு தினங்களாக அடிக்கடி ஹெலிக்கொப்டர்கள் தரையிறங்கிச் செல்வதை அவதானிக்க முடிந்தது. (ஓ-117)

## ஷெல், பீரங்கி தாக்குதல்

சுழிபுரம், அக். 9

காரைநகர் முகாம் படையினர் நேற்று அதிகாலை வேளை சுழிபுரம் திருவடிநிலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தி[illegible] (ஓ-28)

மாசை, தூசை சேரவிட்டால் நாசம் முழுவதும் எங்களுக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் (AROD) வருடாந்தப் பொதுக்கூட்டம் (18-10-1992) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3-30 மணிக்கு 16, கொழும்புத்துறை வீதி, கண்டிக்குளியில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் நடைபெறும். அங்கத்தவர்கள் தயவு செய்து சமுகம் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

- தலைவர்.

(22816)

---

வெளிவந்துவிட்டது!

## சைவநெறி-ஆண்டு 10
### துரித மீட்டலுக்கான வினா-விடை

ஆக்கம்: க. சந்திரசேகரம்
மீள்பார்வை: ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள்
வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம்

ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(இ/3461)

---

## தவறிவிட்டது

க; இராசதுரை (தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க ஊழியர்) மானிப்பாய், மருதடி. என்ற விலாசதாரருடைய அடையாள அட்டையும், சங்க அடையாள அட்டையும், மணிப்பேர்சுடன் ரொக்கப் பணமும் மானிப்பாய் நகரசபை மண்டபத்திற்கு முன்பாகத் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

— க. இராசதுரை

(22822)

---

## பாராட்டுவிழா வாழ்த்து

பிரதிஷ்டா வித்தகர் சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் அவர்கட்கு பாராட்டுவிழா செய்து கௌரவிப்பது அனைவருக்கும் பெருமை தருவதாகும், சிறந்த வேதாகம அறிவும், சோதிட, தமிழ் வல்லமையும் நிறைந்த குருக்கள் அவர்கள் சிறந்த சங்கீத ஞானமும் உடையவராவர். இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெறும் கும்பாபிஷேகம், உற்சவ, பூர்வ, அபர, கைபவங்களை தனித்தும், சேர்ந்தும் நடப்பித்து அனைவரிடத்திலும் அன்புகாட்டி அரவணைத்து சிறப்புப் பெற்றனர். இவ்வைபவத்தின் மூலம் குருக்கள் அவர்களின் தெய்வீகப்பணி மேலும் வளர்ச்சியுறப் பிரார்த்தித்து, இந்தப் பெருமையுற வைபவத்தை நிகழ்விக்கும் சாவகச்சேரி துர்க்கா தேவி தேவஸ்தானம் சிவஸ்ரீ ப. மகாகணபதிசர்மா மற்றும் சைவப் பெருமக்கள் அனைவருக்கும் யாழ்/ இவானந்த குருகுல பரிபாலன சபையினர் வாழ்த்துக்களையும், ஆதரவையும் தெரிவிக்கின்றனர்.

(4993)

---


## முக்கிய அறிவித்தல்

461623336 V என்ற இலக்கமுடைய நாகமணி பஞ்சலிங்கம் என்பவருடைய அடையாள அட்டையும், சிறு தொகைப் பணமும், மோட்டார் சைக்கிள் சாவி, வீட்டுச் சாவி என்பன அடங்கிய பையொன்று குணம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 | 09 |
| — | — |
| 10 | 09 |
| — | — |
| 1915 | 1992 |

### அமரர் நாகமுத்து ஆறுமுகம்

(09 — 10 — 1992)

நினைந்து நினைந்து இறைஞ்சுவோம்

எம்மையும் எமது குடும்பத்தையும் ஆளாக்கி, அன்பு செய்தும், கண்டித்தும், வேண்டிய நல்வழிகாட்டி ஏற்ற முற வாழ்வும் அளித்த எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவுகள் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது. எங்கள் கண்ணீரை காணிக்கையாக்கி கருணை உள்ளம் படைத்த உத்தமரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிரியமுள்ள மனைவி, அன்புக்குரிய மக்கள்,
மருமக்கள், மைத்துனர், சகலன்.

செ. இராசேஜந்திரன்,
859/18 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(2806)

---

## இன்று

யாழ்ப்பாணம், அக். 9

யாழ். கண்டுக்குளி மகளிர் கல்லூரி விஞ்ஞான மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விஞ்ஞானப் பொருட்காட்சி இன்று காலை 9 மணிக்கு கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இரு தினங்கள் நடைபெற இருக்கும் பொருட்காட்சி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

(ஒ)

★ ★ ★

தென்மராட்சி, அக். 9

நாவற்குழி மகாவித்தியாலய இலக்கிய விழா இன்று காலை பத்து மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

வடமராட்சி, அக். 9

அல்வாய் சக்கோட்டையில் இன்று காலை 8 மணிக்கு, இலவச சித்த ஆயுர்வேத வைத்திய நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

வெள்ளிக்கிழமை தோறும் இந்த வைத்திய நிலையம் இயங்கவுள்ளது. (ஒ-165)

★ ★ ★

யாழ்ப்பாணம், அக். 9

வீரமரணமடைந்த கப்டன் வேங்கை மாறனின் (எற்றிசின் சொய்ஸா) நினைவஞ்சலி நிகழ்ச்சி ஒன்று, இன்று காலை 10 மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கல்லூரியின் மாணவர் அவை அறிவித்துள்ளது.

வேங்கை மாறன் தொழில்நுட்பக் கல்லூரியின் தன்னியக்க இயந்திரவியல் பகல்நேர தொழில்துறை வகுப்பு மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

★ ★ ★

யாழ். கலைக்கூடம் வழங்கும் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று பி. ப. 4 மணிக்கு நடைபெறுகிறது. (அ)

★ ★ ★

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம் நடத்தும் வருடாந்த எழுச்சிக் கூட்ட வரிசையில், சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் இன்று தொடக்கம் ஞாயிறு வரை தினமும் பி. ப. 3 மணிக்கு அருளுரைகள் இடம்பெறும்.

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் அருள்திரு டானியேல் எஸ் தியாகராஜா அருளுரைகளை ஆற்றுவார்.

---

A/L MATHS
Mr. P. கமலசிங்கம்
94-இருபடிச் சமன்பாடு
மூலிசைகளின் சமநிலை
93 - வகையீடு
மொத்தல் -
கணத்தாக்கம்
SHAMROCK
யாழ். கண்டுக்குளி.

(22823)

---

## மரண அறிவித்தல்

### சுந்தரம் கோபாலசாமி

(முன்னாள் இ போ: ச. சாரதி - கொண்டாவில்)

கோப்பாய் தெற்கு பழைய வீதியைச் சேர்ந்த சுந்தரம் கோபாலசாமி இன்று அதிகாலை காலமானார்.

அன்னார் சிவமணியின் அன்புக் கணவரும், திருமதி சாந்தினி, திருமதி ஜெயந்தினி (ஜேர்மன்), திருமதி வசந்தி (கனடா), சுரேஷ் (கனடா), சிவாஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்—

மகிழ்ராஜன் (C.T.B வவுனியா), சந்தசாமி (ஜேர்மன்), அருந்தவகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்;

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. குணரத்தினம்
புத்தூர் வீதி,
கோப்பாய்.

(22825)

---

## 1,500 பேருக்கு ஒரு டாக்டர்; அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, அக். 9

ஆயிரத்து 500 பேருக்கு ஒரு டாக்டரை சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சுகாதார அமைச்சர் ரேணுகா ஹெரத் கடந்த புதன் நாடாளுமன்றத்தில் பேசும் போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது 5 ஆயிரம் பேருக்கு ஒரு டாக்டரே நாட்டில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (த-எ)

---

## பெயர் சூட்டு விழா
## ★ அழைப்பு ★

யாழ் / இணுவில் அ. மி. த. க பாடசாலை
யாழ் / இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகள்
ஒன்றிணைக்கப்பட்டு

### யா / இணுவில் மத்திய கல்லூரி

என்ற புதிய பெயரில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படும்

காலம்:- 09 - 10 - 1992 (வெள்ளிக்கிழமை)
பிற்பகல் 3 00 மணிக்கு

தலைவர்: திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை (அதிபர்)

பிரதம விருந்தினர்:- திரு. இரா. சுந்தரலிங்கம் (யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர்)

இங்ஙனம்
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பெற்றோர்கள்,
நலன் விரும்பிகள்.

இணுவில் மத்திய கல்லூரி,
இணுவில்.

---

யா / இணுவில் மத்திய கல்லூரி இன்று உதயமாவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்; கல்லூரி வளம்பெற தமது நல்லாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் உரித்தாகும் வண்ணம்

★ வாழ்த்துபவர்கள் ★

DISPENSARY
Inuvil West, Inuvil.

கணேசன் ரேடிங் கொம்பனி
இணுவில்.

சாயி கவுஸ்
கொழும்பு.

JAFFNA STORES
நிவித்திகலை, இரத்தினபுரி.

சிற்றி என்டர் பிறைஸ்
இணுவில்.

பெஷன் கவுஸ்
யாழ்ப்பாணம்.

அபிராமி பெஷன் கவுஸ்
சுன்னாகம்.

அம்பாள் ரவல்ஸ்
இணுவில்.

சிவன் ஸ்ரோர்ஸ்
இணுவில்.

கமக்காரர் மாளிகை
சுன்னாகம்.

நாதன் பிறதேர்ஸ்
சுன்னாகம்.

அண்ணா இன்டஸ்ரீஸ்
இணுவில்.

ஜெனடென்ஸ்
இணுவில்.

கிருஷ்ணா மரத் தொழிற்சாலை
இணுவில்.

கோபாலபிள்ளை பலசரக்கு மாளிகை
இணுவில்.

உர மாளிகை
ஆஸ்பத்திரியடி, இணுவில்.

டைமன் ரேடர்ஸ்
சுன்னாகம்.

எவரஸ்ட் கல்வி நிறுவனம்
இணுவில்.

டென்சி போட்டோ
இணுவில்.

(இ-2511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக இளைஞர்களை விடுவிக்க
## பல அமைப்புகள் கோரிக்கை

கொழும்பு, அக். 9

தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர்களை ஒன்றில் விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என மலையக அமைப்புக்கள் பலவும் அரசைக் கோரியுள்ளன.

கடந்த இரு வருடங்களுக்கு முன் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் இவர்கள் ஊவா பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலரைத் தவிர சுமார் 40க்கும் அதிகமானோர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. தொடர்ந்தும் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் விடுதலையை மலையக அமைப்புக்கள் வலியுறுத்தியபோதெல்லாம் "விசாரிக்கப்பட்டு விரைவில் விடுதலை செய்யப்படுவோர்கள்" என்ற பதிலே கடந்த இரண்டு வருட காலமாகப் பொறுப்புள்ளவர்களினால் கூறப்பட்டு வருகிறது. ஆனால் எவருமே விடுதலை செய்யப்படவில்லை.

விசாரணைகளுக்குப் பொறுப்பான ஓய்வுபெற்ற நீதியரசர் ஜயலத் கடந்த ஜனவரியில் "இவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள்" என வாக்குறுதி அளித்திருந்தார். அமைச்சர் செல்லச்சாமியும் இது விடயமாக அரசிடமும், பாதுகாப்பு உயரதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டார். இவர்களின் விடுதலை தொடர்பாக பல உயர்மட்ட மாநாடுகள் தொடர்ந்தன.

எனினும் இந்த 40க்கும் மேற்பட்ட மலையக இளைஞர்கள் இன்னமும் விடுதலையாகவில்லை என மலையக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

(ஒ-ம)

# அவசரகால சட்டவிதி நீக்கம்;
## தொண்டமானே காரணமாம்

கொழும்பு, அக். 9

எற்றுமதிப் பொருள்கள் தொடர்பாகக் கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகளை அரசு நீக்கியதற்கு அமைச்சர் தொண்டமான் பிரதான காரணமாக இருந்தார்.

இவ்வாறு "ஐலண்ட்" பத்திரிகையின் சகோதர சிங்களப் பத்திரிகையான "திவயின" தனது ஞாயிறு விமர்சனக் கட்டுரையில் தெரிவித்துள்ளது.

அவசரகாலச் சட்ட விதிகளுக்கு எதிராக எதிர்க் கட்சிகள், தொழிற் சங்கங்கள், பத்திரிகைகள் எதிர்ப்புத் தெரிவித்தன. எனினும் இந்த எதிர்ப்பினால் மட்டும் சட்ட விதிகள் விலக்கப்படவில்லை எனவும் —

திரு. தொண்டமான் அச் சட்ட விதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததும் அவை விலக்கப்படக் காரணம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸா பாகிஸ்தான், நேபாள விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய சமயம் திரு. தொண்டமான் அவரைச் சந்தித்து இந்தச் சட்ட விதிகளின் பாதகத்தன்மைகளை விளக்கிக் கூறியதாகவும், அவற்றை ஜனாதிபதி செவிமடுத்த பின்னரே சட்டவிதிகள் விலக்கப்பட்டதாகவும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-10)

# 400 மகாபொல புலமைப் பரிசில்கள்:
## திறந்த பல்கலைக்கழகம் வழங்கும்

கொழும்பு, அக். 9

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் அடுத்த ஆண்டு 400 மகாபொல புலமைப் பரிசில்களை வழங்கத் திட்டமிட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

1993 ஜனவரியில் இருந்து விஞ்ஞானம், சட்டம், பொறியியல், சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பட்டப் படிப்பை மேற்கொள்ள விரும்பும் சிறந்த கல்வித் தராதரங்களுடைய - நிதி உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு முதன் முறையாக 400 மகாபொல புலமைப் பரிசில்களை வழங்க இலங்கை திறந்த பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது. (த-எ)


## யாழ்ப்பாண கிறீஸ்தவ ஒன்றியம்

Jaffna Christian Union

வருடாந்த

ஆன்மீக எழுச்சிக் கூட்டங்கள் - 1992

(ANNUAL CONVENTION)

அருளுரையாளர்:
அருள்திரு. டானியேல் எஸ். தியாகராஜா
முதல்வர் - கிறிஸ்தவ இறையியல் கல்லூரி

இடம்: பரி. யோவான் கல்லூரி மண்டபம், சுண்டிக்குளி.

காலம்: ஒக்டோபர் 9, 10, 11 (வெள்ளி முதல் ஞாயிறு வரை)

நேரம்: மாலை 3-00 மணி முதல்

அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்

(இ-3560)



## செஞ்சிலுவைச் சங்கம்

கரவெட்டிப் பிரிவு.

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | — | 3606 | துவிச்சக்கரவண்டி (லுமாலா) |
| 2 ஆம் பரிசு | — | 1879 | சமையல் உபகரணங்கள் |
| 3 ஆம் பரிசு | — | 2384 | பெற்றோமாக்ஸ் |
| 4 ஆம் பரிசு | — | 745 | சுவர் மணிக்கூடு |
| 5 ஆம் பரிசு | — | 166 | தேமஸ் பிளாஸ்க் |

மேற்படி நிகழ்வு கரவெட்டிப் பிரிவுத் தலைவர் தலைமையில், திரு. என். சிறீனிவாசன் (உதவி அரசாங்க அதிபர்), வைத்திய கலாநிதி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை (மாவட்ட வைத்திய அதிகாரி), திரு. ஏ. ரி. ஏ. தேவராஜா (முகாமையாளர் - இலங்கை வங்கி, நெல்லியடி), வட்டாரப் பொறுப்பாளர் ஆகியோர் சமூகமளித்து சிறப்புடன் நடைபெற்றது.

கௌரவ செயலாளர்,
யா/கரவெட்டிப் பிரிவு.

(22811)


# சேவைக்கால கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், அக். 9

சமூகக்கல்வியும், வரலாறும் போதிக்கும் ஆசிரியர்களுக்கும், ஆலோசகர்களுக்குமான சேவைக்கால கருத்தரங்கு நாளை முதல் 20 ஆம் திகதி வரை நான்கு கோட்டங்களில் நடைபெறவிருக்கின்றன.

பண்டத்தரிப்பு கோட்டத்துக்கான கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் காலை 9-00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் —

மருதனார்மடம் கோட்டத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் —

வடமராட்சி கோட்டத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் —

தென்மராட்சி கோட்டத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறும். (த-3)

# மாவீரர் தின போட்டிகள்

யாழ்ப்பாணம், அக். 9

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் மாவீரர் தினத்தையொட்டி பேச்சு, பாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இவை ஆறு பிரிவுகளாக பாடசாலை மட்டத்தில் நடத்தப்படும். "குறித்த பாடசாலையின் மாவீரர்", "பாடசாலைச் சுற்றாடலில் மாவீரர்" ஆகிய விடயங்களைப் பற்றியதாக பேச்சுப்போட்டிகள் இருக்கும்.

பாட்டுப் போட்டி தமிழீழ [illegible] தாக அமையும்.

(ஒ-ம)

# இணுவில் மத்திய கல்லூரி
## பெயர் சூட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், அக். 9

இணுவில் சைவ மகாஜன வித்தியாலயமும், இணுவில் அ.மி.த.க. பாடசாலையும் இணைந்து உதயமான இணுவில் மத்திய கல்லூரியின் பெயர் சூட்டுவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

கல்லூரியின் அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைப்பார்.

மருதனார்மடம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன், உடுவில் உதவி அரச அதிபர் செல்வி தனுஜா தணிகாசலம், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கல்விப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகவும் —

உடுவில் கொத்தணி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம், இக் கல்லூரியின் முன்னாள் அதிபர்களான திரு. செ. சோதிப்பெருமாள், திரு. க. பேரம்பலம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (த-3)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு;
## விரைவில் காண வேண்டும்

### தொழிலாளர் முன்னணி கோரிக்கை

கொழும்பு, அக். 9

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை விரைந்து காணும்படி அனைத்து அரசியல் கட்சிகளையும் இலங்கைத் தேசியத் தொழிலாளர் முன்னணி கோரியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரச மற்றும் எதிர் தீவிரவாத நடவடிக்கைகளால் தீர்வு கண்டுவிட முடியாது என்றும் இம் முன்னணி அரசியல் கட்சிகளுக்குச் சுட்டிக்காட்டியுள்ளது. (த-எ)

# பெண்களின் கைகளில் தான்
## சேமிப்பு தங்கியுள்ளது

### பொற்கணக்கு அறிமுகவிழாவில் பேச்சு

பெண்கள் தான் குடும்பத்தின் நிதி மந்திரி; ஆண்கள் உழைப்பாளிகளாக இருந்தாலும் பெண்களின் கைகளில் தான் சேமிப்பு தங்கியுள்ளது.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக் கிளை கரும பீடத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மகளிர் பொற்கணக்கு அறிமுகவிழாவில் இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளை முகாமையாளர் திருமதி துரைராசா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் திரு. தில்லைநாதன் தலைமையில் அறிமுகவிழா நடைபெற்றது.

அங்கு திருமதி துரைராசா மேலும் கூறியதாவது, பெண்களுக்கான இச் சிக்கன சேமிப்புத் திட்டத்தை இலங்கைவங்கி இப்பொழுது தான் முதன்முதலாக ஆரம்பித்து வைத்துள்ளது. இத் திட்டத்தில் பரிசில்களும் அதிர்ஷ்டங்களும் அடங்கி இருக்கின்றன. இதன் மூலம் நீங்கள் ஒவ்வொருவரும் சேமிப்பு வளத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும் — என்றார்.

இந்த வைபவத்தில் மற்றும் பலரும் உரையாற்றினர்.

அன்றைய தினம் 22 பேர் பொற்கணக்கை ஆரம்பித்தனர். (ஒ-165)

# மாணவர் அறிவியல் கழகம்
## முல்லையில் திறந்து வைப்பு

முல்லைத்தீவு, அக். 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் "மாணவர் அறிவியல் கழகம்" புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த வாரம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

"மாணவர் அறிவியல் கழகம்" விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் துணை அமைப்பாகச் செயற்படும்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வே. அரவிந்தன் அறிவியல் கழகத்தினை ஆரம்பித்து வைத்தார்.

முள்ளியவளை, வற்றாப்பளை றோ. க. த. பாடசாலை, குமுழமுனை அ. த. க. பாடசாலை, செம்மலை மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், நெடுங்கேணி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மாணவர் அறிவியல் கழகம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

வைபவத்தில் மாணவர் அமைப்பு உதவிப் பொறுப்பாளர் ச. நாவண்ணன், முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நவீனன் ஆகியோரும் உரையாற்றினர். (த-ம)

# பல்கலைக்கழக அரையாண்டு பரீட்சை

யாழ்ப்பாணம், அக். 9

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் அரையாண்டுப் பரீட்சைகள் இம்மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

அத்துடன் முதலாம் ஆண்டு பரீட்சையும் அன்றைய தினம் ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழக பரீட்சைப் பகுதி அறிவித்துள்ளது. (த-3)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 9

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் தெற்கு பிரிவு தொண்டர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கோவில் வீதியிலுள்ள மேற்படி கிளையின் பணிமனையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Hy-Line பிறவுண், கறுப்பு, சேவல் குஞ்சுகள் எம்மிடம் விற்பனைக்குண்டு. ரவி றேட்டர்ஸ் திருநெல்வேலி. ச. ரவீந்திரன், கோண்டாவில் கிழக்கு, (நாகபூஷணி அம்மன் கோவிலடி) (5369)

## உடன் விற்பனைக்கு

Highline+ Prima+ Babira வெள்ளை, கறுப்பு, பிறவுண் லேட்டு குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் உடன் தொடர்பு கொள்ளவும். 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (22795)

## எழுத்துக்கோர்ப்பாளர்

எழுத்துக்கோர்ப்பாளர்கள் தேவை. இருபாலாரும் அனுமதிக்கப்படுவர்: பயிலுனர்களுக்கும் இடமுண்டு. நேரில் வரவும்: பாரதி பதிப்பகம், (A. B Printers), 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3565)

## அறிவுக்களஞ்சியம்

மாணவர்களுக்கு மட்டுமல்ல பொது அறிவை வளர்த்துக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் வேண்டியது அறிவுக்களஞ்சியம். நாலாவது இதழ் விற்பனையாகிறது. ரூபா 10. உங்கள் விற்பனையாளரிடம் கேளுங்கள். (சி-3562)

## இடம்மாற்றம்

இதுவரை காலமும் கோவில் வீதி, நல்லூரில் இயங்கி வந்த சித்ரா லயா விருடியோ 05-10-92 முதல் கிராண்வி வீதியில் உள்ள பழைய இடத்தில் இயங்குகின்றது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம். (5364)

## கல்வி

கொழும்பு றோயல் கல்லூரியில் கற்றவரால் ஆண்டு 7 முதல் சகல மாணவர்களுக்கும் தனிப்பட்ட ரீதியிலும் வீடுகளுக்குச் சென்று ஆங்கிலம் கற்பிக்கப்படும். நேரிலோ/கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். டானியல், Y. M. C. A, உணவகம், Y. M. C. A., யாழ்ப்பாணம். (22781)

## ஆண்டு 6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 10 - 92 முதல் 16 - 10 - 92 வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Bond Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-3539)

## ஆண்டு - 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute. 582, Stanley Road, Jaffna (சி-3540)

## நளவெண்பா

ஆண்டு 10, 11 வகுப்புகளுக்குரிய நளவெண்பா தொகுப்பு தெளிவுரை, விளக்கவுரை விரிவான விளக்கத்துடன் வெளிவந்துள்ளது. ஆக்கம் எஸ். பாலா, விலை 30/- சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-3565)

## மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம்/றோ. க/ கிறிஸ்தவம்), வர்த்தகம் விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road, Jaffna. (சி/3541)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, நேரம் தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை, பிற்பகல் 2-30 முதல் 6-00 வரை. கவனிப்பு-இலவசம் இல்லை. (22784)

உங்கள் வாழ்க்கையில் பிரச்சினைகள் எதுவானாலும் நீங்கி, சுபீட்சமடைய அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேச உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, நல்லூர். (22813)

---

# C. C. A.

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

**வணிக முதற் தேர்வு**
வகுப்புகள்
ஆரம்பமாகிவிட்டன.

வணிகமாணி பகுதி I க்குரிய
வகுப்புகள் ஆரம்பம்:
**10 — 10 — 1992**
காலை 8 மணி

**கணக்கியல் வகுப்புக்கள்**
திங். புதன். வெள்ளி
பி. ப. 4-00 மணிக்கு
நடைபெறும்

வணிகமாணி I க்குரிய
வகுப்புகள்
பிற்பகல் 5 மணிக்கு
நடைபெறும்.

(சி-3570)

---

## பரிசளிப்பு விழா

உடுவில், அக். 9

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திரு. இ. வல்லிபுரம் தலைமையில் நடைபெறும். (த-152)

## தி. மு. கழகத்தினர் சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, அக். 9

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நேற்று முன்தினம் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்தே அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாநில அரசின் தொழில் வரியைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர். (ஒ)

## எய்ட்ஸ் எச்சரிக்கை

கொழும்பு, அக் 9

அடுத்த எட்டு ஆண்டுகளில் இரண்டு கோடி பேர் எய்ட்ஸ் நோய் காரணமாக உயிரிழப்பர் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. (த-எ)

---

# கலை, 'வர்த்தக கல்லூரி

# C. C. A.

யாழ்ப்பாணம்.

*Day Classes*

# A/L 93

பிரிவு I வினா-விடை
பிரிவு II பாடத்திட்டம்

குறிப்பு:

1. பிரிவு I அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
2. பிரிவு II இன்னும் சொற்ப இடமே உண்டு.
3. வாரத்தில் 4 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
4. எல்லாப் பிரிவுகளுக்கும் எல்லாப் பாடங்களும் கடந்த 10 ஆண்டு கால பரீட்சை வினா-விடை செய்து முடிக்கப்படும்.
5. 92 ஆம் ஆண்டு பரீட்சை வினாக்களுக்கு விடை அளிக்கப்படுகிறது.

-நிர்வாகி.

(சி-3567)

---

# MODERN EDUCATION CENTRE

UDUPPIDDY.

**கலை, வர்த்தக வகுப்புகள்**

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
10-10-1992 சனி

**A/L 93** 1-00 மணி
**A/L 94** 2-00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல் | — | திரு. பவான் |
| வர்த்தகம் | — | திரு. எஸ். கே. சோதிலிங்கம் |
| அளவையியல் | — | திரு. பவான், |
| | — | திரு. எஸ். சோதிலிங்கம் |
| இந்து நாகரிகம் | — | திரு. ஜோதிஸ்வரன் |
| தமிழ் | — | திரு. நடா |

**A/L 93 Day Classes**

ஆரம்பம்: 13-10-1992
காலை 10-30 மணி

(சி-3454)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்

## சற்குணலிங்கம் அனுஷன்

(கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை மாணவன்)

எமது கரங்களில்: 30 — 10 — 1981
ஆண்டவன் கரங்களில்: 21 — 09 — 1991
திதி: 09 — 10 — 1992

ஓராயிரம் மொட்டுக்கள் மலர்ந்தாலும்
ஆராவமுதே உனக்கு அவை நிகராமோ-எம் அனுவே!
தீராத எம் கண்ணில் நீருற்று
வாராது வந்த மாமணியே - உன் நினைவில்
பேராற்றல் படைத்த எம் பெருமான்
ஆரத் தழுவினரோ அன்பின் மிகுதியால்.

உன் பிரிவால் துயருறும்;
அன்பு அப்பா, அம்மா, அக்கா, அப்பம்மா,
அம்மம்மா, சித்தப்பாமார், தாத்தா,
மாமா, அத்தைமார், அன்ரிமார்,
அங்கிள்மார் மற்றும்
உடன் பிறவா சகோதரர்கள்.

நா. சற்குணலிங்கம்,
பூவரசு மரத்தடி,
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில். (22808)

---

# அணைந்த தீபத்தின்
# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## சிவஞானசம்பந்தர் சிவநாதன்

அன்னை மடியில்: 17 — 09 — 1969
ஆண்டவன் அடியில்: 12 — 10 — 1989

திதி: 09 — 10 — 1992

சிவநாதா சுந்தரனே - உன்
சிரித்த முகம் எங்கே
சிவனை நினைத்திடவே
சிவநாதன் என்றழைத்தோம்
சிவன் உன்னை அழைத்ததால்
சிவலோகம் சென்றாயோ?

- குடும்பத்தினர்.

கொக்குவில் மேற்கு. (5367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## கூட்டுச் சேர்ந்து ஏமாற்றுகிறார்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்வதற்கு இராணுவத்துக்கு ஆட்பலம் போதாது. இராணுவத் தளபாடங்களும் மேலதிகமாகத் தேவை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வா.

ஈழப்போர்-இரண்டு தொடங்கிய கடந்த இரண்டரை வருடங்களாகப், பொறுப்பான பதவிகளுக்கு வரும் உயர் இராணுவ அதிகாரிகள் இதே பல்லவியையே பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

முப்படைகளையும் சேர்ந்த துருப்புகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தையும் தாண்டிவிட்டது. ஆயினும் ஆயுதப் படைகளுக்கு புதிதாக ஆட்களைச் சேர்ப்பதற்காக மாதாந்தம் (சில வேளைகளில் வாராந்தமும்) நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. அதேபோல கோடானு கோடி ரூபா பணத்தைச் செலவிட்டு நவீன டாங்கிகளையும், நவீன யுத்தப் படகுகளையும், சுப்பர் சோனிக் முதற்கொண்டு நவீன போர் விமானங்களையும் தொடர்ச்சியாக வாங்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

எனினும் புதிதாகப் பொறுப்பான பதவிக்கு வரும் அதிகாரிகள் ஒவ்வொருவரும், புலிகளை வெல்வதற்கு ஆட்பலம் போதாது; ஆயுதத் தளபாட வசதி குறைவு என்பதையே கீறல் விழுந்த ஒலித்தட்டுப் போல கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பது அல்லது பலவீனப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதைக் கூறினால் இராணுவத்தின் மதிப்புக் குறைந்துவிடும் என்று இந்த அதிகாரிகள் நினைக்கிறார்கள். விடுதலைப் புலிகளை வெல்ல முடியும், தமிழர்களுக்கு எதிரான இராணுவ மேலாதிக்க நிலையைத் தம்மால் எய்த முடியும் என்ற ஒரு பொய்யான தோற்றத்தை அரசியல் தலைவர்களுக்கு காட்டுவதற்காக, அதனை நம்பச் செய்வதற்காகவே தமக்குப் பெரிய தோல்விகள் ஏற்படும் போதெல்லாம் இராணுவ உயர் அதிகாரிகள் இந்தக் காரணங்களை கூறிக் கொண்டிருக்கிறார்கள்!

அரசியல் தலைவர்களும், இராணுவ மேலாதிக்க நிலையை எய்தினால்தான், தமிழர் மீது தமக்கு வசதியான ஒரு தீர்வைத் திணிக்க முடியும் என்று அலமலந்து கொண்டிருக்கிறார்கள். அதனையே ஒரு நிரந்தர வடிவமாக தமக்கு முன்வைத்திருப்பதால் இராணுவ உயர் அதிகாரிகள் கூறுவதன் சாதக பாதகங்களை அலசி ஆராயாமல் கண்ணை மூடிக் கொண்டு நம்புகிறார்கள். தமிழர்களுக்கு மேலான இராணுவ மேலாதிக்கத்தை எட்டிவிட வேண்டும் என்ற ஆசையில்; ஆவலில் இராணுவ உயர்பீடத்தினர் கேட்பதை எல்லாம் கொடுக்கிறார்கள். மக்களின் உணவுத் தேவைகளுக்கு 460 கோடி ரூபாவை ஒதுக்கும் அரசு இராணுவச் செலவுக்கு 3,860 கோடி ரூபாவை ஒதுக்கியிருப்பது அதனாலேயே!

இவ்வாறு அரசாங்கத் தலைவர்களும், இராணுவ உயர் அதிகாரிகளும் கூட்டுச் சேர்ந்து சிங்கள மக்களுக்கு பொய்களைக் கூறியும், தவறான வழி சென்றும் சிங்கள தேசத்தை படுகுழிக்கு இட்டுச் செல்கிறார்கள்;

உண்மையான கள நிலையையும், நடைமுறைச் சாத்தியங்களையும், பிரச்சினையின் யதார்த்தமான நிலைப்பாட்டையும் சிங்கள மக்கள் அறிந்து அரசியல் தலைவர்களுக்கு பாடம் கற்பிக்கும் வரை, இந்த நாட்டின் மிகப் பெரிய தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்ந்து இழுபடவே செய்யும். அதாவது அழிவும், நாசமும் மனித வாழ்க்கைச் சீர்கேடும் தொடரும்.

## ரத்தாகும்

கொழும்பு, அக். 9

1972, 1973 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட 4 லட்சம் பேரின் தேசிய அடையாள அட்டைகள் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் ரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [த-எ]

## நாளை

புனித பத்திரிசியார் கல்லூரியின் பெற்றோர் தின நிகழ்ச்சிகள், நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தம்பதியர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர். [ஒ]

★ ★ ★

வண்ணார்பண்ணை, அக். 7

யாழ். மாவட்ட இந்து கலாசார... கூட்டுறவுச் சங்கங்களின் இளைஞர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை காலை 9 30 மணியளவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறும்.

[ஒ-162]

★ ★ ★

'நாட்டியக் கலைமணி' செல்வன் முருகையா அருள் மோகனின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி, நாளை பிற்பகல் 2. 30 மணிக்கு, யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சிக்கு பேராசிரியர் வே. பாலசுந்தரம்பிள்ளை தலைமை வகிப்பார். [ஒ]

★ ★ ★

சிவமுருகுப்பிள்ளை மௌனகுரு கடவுள் சுவாமிகளின் வருடாந்த குருபூசை நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் மறுவன்புலோவில் உள்ள சுவாமிகளின் சமாதி நிலையத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ். கல்வித் திணைக்களம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி சம்பந்தமான முக்கிய கூட்டம் ஒன்று நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

17, 19 வயதுப் பிரிவுகளில் கோட்ட மட்டத்தில் நடைபெற்று வந்த போட்டிகள் தற்போது இறுதி நிலையை அடைந்துள்ளன.

ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் முதல் நான்கு இடங்களைப் பெற்ற அணிகள் மாவட்ட நிலைப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கும், அணிகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்குமான கூட்டமே நாளை நடைபெறும் என உடற்கல்விக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிநாதன் தெரிவித்தார். [உ]

## இன்றைய கருத்தரங்குகள்

பண்டத்தரிப்புக் கோட்டத்தில் ஆண்டு 9, 10, 11 வகுப்புக்களில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, சைவசமயம், வர்த்தகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்குகள் இன்று வெள்ளி முதல் நடைபெறவுள்ளன;

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, மருதனார் மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரி ஆகியவற்றில் இக் கருத்தரங்குகள் தனித்தனி நேரசூசிகையின் படி நடைபெறவுள்ளன; [ஒ-ம]

### சூட்டுக் காயத்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அங்கு இருந்த — படகில் பொருத்தும் — பாய்க்குள் நுழைந்து மறைந்து படுத்துக் கொண்டேன்.

பின்னர் எமது படகை அண்டி சிங்களக் குரல்கள் கேட்டன;

மீண்டும் சரமாரியான துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன; படகிலிருந்த பெண்களும், வயோதிபரும், சிறுவனும் "ஐயோ! ஐயோ!!" எனக் கூக்குரல் எழுப்பியது எனக்குக் கேட்டது; பின்னர் அச்சத்தம் அடங்கி விட்டது;

சற்று நேரத்தில் நான் இருந்த படகு அசைந்து கடலில் செல்வதை என்னால் உணர முடிந்தது;

**இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்**

நான் ஒளிந்திருந்த பாயை நீக்கிப் பார்த்தேன்; படகில் வந்த ஐவரும் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டேன். எமது படகைப் படையினர் பூநகரிப் பக்கமாகக் கட்டி இழுத்துச் செல்வதையும் கண்டேன்.

உடனே படகிலிருந்து சாதுரியமாகக் குதித்து, ... தூரம் கடலில் நீந்தி கிளாலித் துறையை வந்தடைந்தேன்.—என்றார்; [உ-15-17]

## வீதியோரங்களைப் பேண மாநகரசபை கோரிக்கை

கொழும்புத்துறை, அக் 9

நகர வீதியோரங்களைப் பாதுகாத்து ஒத்துழைக்குமாறு யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பிரிவு பொது மக்களைக் கேட்டுள்ளது:

இது தொடர்பாக சுகாதாரப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

வாகனங்கள், எரிபொருள்கள் பற்றாக்குறையின் மத்தியிலும் யாழ். மாநகரசபை மன்றம் நகரின் தூய்மையைப் பேணுவதில் தன்னாலான சகல வழிகளிலும் முயன்று வருகிறது;

நகர வீதியோரங்கள் செம்மை செய்யப்பட்டு இயல்பான நீரோட்ட வசதி தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ளது. தெருக்கள், வீதிகள் பழுதடையாவண்ணம் இத்தகைய சிரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மழை காலம் ஆரம்பித்து விட்டமையால் வீதிகள் பழுதடையும் வாய்ப்புக்கள் அதிகரிக்கலாம். வீதி ஓரங்களில் முட்செடிகள், பூச்செடிகளை வெட்டிப்போடுவது ஒரு தவறான செயல். வீதிப்பாதுகாப்பிற்கு இவை ஊறுவிளைவிக்கும் ஆதலால் இத்தகைய செயல்களைத் தவிர்த்து வீதிகளைப் பேண மக்கள் உதவ வேண்டும்.

இவ்வாறு அதில் கேட்கப்பட்டுள்ளது. (த-ம)

### அதிபர் நினைவாக புலமைப்பரிசில்

மானிப்பாய், அக். 9

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் முத்துவேற்பிள்ளை ஞாபகார்த்தமாக புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

கல்லூரி வாகீசர் மண்டபத்தில் நடைபெற்ற விழாவுக்கு கல்லூரி அதிபர் திரு: எஸ். வேசவராஜன் தலைமை வகித்தார்; பிரதம விருந்தினராக சட்டத்தரணி சிவா: இராசேந்திரன் கலந்து கொண்டார்;

ஜி. சீ. ஈ. சாதாரண தர வகுப்புக்குரிய இப்புலமைப் பரிசிலை தியாகராசா திலகரத்தினம் பெற்றுக் கொண்டார். (அ)

### ஆனையிறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது என்ற உண்மையை அறிந்து கொண்டபோதிலும் அதனை இலகுச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன;

இதே மனிதாபிமானக் காரணங்களுக்காகவும் பொது மக்களின் வசதி மற்றும் பாதுகாப்புக்காகவும் பாதுகாப்புப் படையினர் ஆனையிறவுப் பாதையைப் போக்குவரத்துக்குத் திறந்துவிட முடிவு செய்துள்ளார்கள்;

இந்த வழியாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் எதுவும் நடத்தப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது — என்றுள்ளது. [அ-எ-10]

### கிளாலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாக மொத்தம் ஒன்பது பேர் இருந்தனர்.

அவர்களை நோக்கி நெருங்கிச் சென்ற கடற்படையினர் படகை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது அதிலிருந்த மூன்று பெண்கள், ஒரு சிறுவன் உட்பட ஐந்து பேர் படகுக்குள்ளேயே உயிரிழந்தனர்;

படையினரின் துப்பாக்கிச் சூட்டை அடுத்து கடலில் பாய்ந்த இரு ஆண்கள் கடலில் நீந்திக் கொண்டிருந்த வேளை படையினரின் சூட்டுக்கு இலக்கானதாகவும், பின்னர் அவர்கள் காணாமற் போனதாகவும் தெரியவந்தது.

அந்தப் படகின் படகோட்டிகளான சுப்பிரமணியம் ஜெயேந்திரன் [வயது 21], அவரது தம்பியான சுப்பிரமணியம் மகேந்திரன் [வயது 18] ஆகிய இருவரும் சூட்டுக் காயங்களுடன் கடலில் பாய்ந்து தப்பிக் கரைசேர்ந்தனர்; இவர்கள் இருவரும் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்: மகேந்திரன் பின்னர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்;

**கட்டி இழுத்துச் சென்றனர்**

பயணிகள் இறந்த படகையும், [அவர்களின் சடலங்களுடன்] அதற்குப் பின்வரால் நெல் மூடைகள் ஏற்றி வந்த மற்றொரு படகையும் கடற்படையினர் தமது படகுகளுடன் கட்டி இழுத்துக்கொண்டு சென்றனர்;

நெல் மூடை ஏற்றி வந்த படகின் ஓட்டிகள் இருவரும் கடலில் பாய்ந்து தப்பினர்;

இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கி 22 பயணிகளுடன் வந்ததாகக் கூறப்படும் மற்றொரு படகு, துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதை அடுத்து, இடை... ...நடந்ததாகவும் அறியவந்தது. [உ-15-17]

### "ஐயோ சுடாதீர்"...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஏறினார்கள்;

எனக்கு உதவியாக எனது தம்பியான மகேந்திரனும் [வயது 18] படகில் வந்தார்.

ஆலங்கேணி துறையிலிருந்து நேற்று [வியாழன்] அதிகாலை சுமார் 2 30மணிக்குப் புறப்பட்டோம்.

சுமார் மூன்று மணிநேரத்தில் ஆலங்கேணியிலிருந்து 3 மைல் தூரத்தில் உள்ள குரமுனங்கு கடற்பிரதேசத்தை எமது படகு அண்மித்த போது இருட்டில் இரண்டு படகுகள் தரித்திருப்பதைக் கண்டோம்;

**எம்மைத் தொடர்ந்த படகுகள்**

அப்படகுகளை விலத்தி நாம் சென்ற போது, அந்தப் படகுகள் எம்மை தொடர்ந்து வந்தன.

திடீரென அப்படகுகளில் இருந்து துப்பாக்கி வேட்டுகள் முழங்கின எனது தொடையில் துப்பாக்கிச் சூடு விழுந்தது; நான் சத்தியவாறு படகிலிருந்து கடலில் பாய்ந்தேன்.

கடல் நீரில் மிதந்தவாறு படகின் மற்றைய பக்கத்தைப் பிடித்துக் கொண்டு — படகிற்குப் பின்னால் — மறைவாக ஒளிந்து கொண்டேன்.

படகில் வந்த மற்றைய இரு ஆண்களும் என்னைப் போலவே கடலில் பாய்ந்து படகின் மறைவில் ஒளித்து நின்றனர்;

அப்போது படையினர் தமது படகிலிருந்து வெளிச்சம் பாய்ச்சியவாறு எமது படகை நோக்கி முன்னேறுவதைக் கண்டோம்.

அதனால் படகைக் கைவிட்டு தண்ணீரில் இருட்டான பகுதியை நோக்கி நீந்த ஆரம்பித்தோம்.

என்னுடன் நீந்தி வர முற்பட்ட மற்றைய இருவருக்கும் சூடு விழுந்தது. அவர்களும் காயமுற்றனர்.

**கூக்குரல்**

படையினர் எங்களை விட்டு விட்டு படகிலிருந்தவர்களை நோக்கி, வெளிச்சத்தைப் பாய்ச்சி, வேட்டுக்களைத் தீர்த்தனர்.

படகிலிருந்த மூன்று பெண்களும், வயோதிபர்களும் மற்றும் சிறுவனும் "ஐயோ, ஐயா எங்களைச் சுடாதீர்கள், சுடாதீர்கள் என்று கூக்குரலிட்டது எனக்குக் கேட்டது;

எனினும் படையினர் விடாது சுமார் இரு நிமிட நேரம் வேட்டுக்களைத் தீர்த்தனர்; வேட்டுக்கள் ஓய்ந்த போது கூக்குரலிட்ட ஐவரின் சத்தமும் அடங்கிப் போயிருந்தது. அவர்கள் ஐவரும் படகிலேயே உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சுகிறேன்.

அப்போது படகிலிருந்த எனது தம்பி மகேந்திரனுக்கு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் பின்னர் அவர் சூட்டுக் காயங்களுடன் தப்பியதாக அறிந்தேன்.

**கிளாலி நோக்கி நீந்தினேன்**

எமது படகை படையினர் தங்களது படகுடன் கட்டி இழுத்துச் செல்ல, நான் கிளாலிக் கரையை நோக்கி நீந்தினேன்.

என்னுடன் நீந்தி வர முற்பட்ட மற்றைய இரு ஆண்களும் தங்களுக்கு காலில் சூடு பட்டிருப்பதாகவும் —

தங்களால் நீந்த முடியாமல் இருப்பதாகவும் இடைவழியில் கூறினார்கள்.

அவர்களைப் போல நானும் காயமடைந்திருந்தால், அவர்களைக் காப்பாற்ற முடியாது, கைவிட்டு மெல்ல மெல்ல நீந்திக் கரை சேர்ந்தேன்.

அவர்கள் இருவரும் என்னவானார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை— என்றார். [உ-15]

## நல்லின ஆடுகளை பெருக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், அக். 9

யாழ்.மாவட்டத்தில் நல்லின ஆடுகளைப் பெருக்கும் திட்டம் ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடைமுறைப்படுத்தியுள்ளது;

இத் திட்டத்தின் கீழ் தொகுதிப் புரத்தில் 59 குடும்பங்களுக்கு ஏற்கனவே நல்லின ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைச் சினைப்படுத்தி பெறப்படும் சிறந்த இன ஆடுகள் தென்மராட்சிக் கோட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. [த-ம]

## வைத்தியசாலைகள் மீண்டும் இயங்குகின்றன

முறிகண்டி, அக. 9

வைத்தியர்கள் இல்லாததால் கடந்த பல மாதங்களாக இயங்காமல் இருந்த வேணாவில், கண்டாவளை அரசினர் வைத்தியசாலைகள் தற்போது மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளன;

மேற்படி வைத்தியசாலைகளுக்கு இரண்டு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு, இப் பகுதி மக்களுக்கு வைத்திய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன; [த-97]

## கூட்டுறவாளர் எழுச்சி வாரம்

வண்ணார்பண்ணை, அக். 9

கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்குடன் எதிர்வரும் நவம்பர் மாதத்தின் முதல் வாரம் கூட்டுறவு அங்கத்துவ எழுச்சி வாரமாக கொண்டாடப்படவுள்ளது.

இதற்காக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை, அதன் அங்கத்துவ சங்கங்களுடன் சேர்ந்துசுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது; [ஒ-162]

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், அக். 9

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்று மாலை நடைபெறவிருக்கின்றன.

திருமலை நட்சத்திரங்கள் அணியை எதிர்த்து பங்றோயல் அணியும் —

பாடும்மீன் அணியை எதிர்த்து வைக்கிங்ஸ் அணியும் மோதும். [உ]

## பரீட்சைக்கு வகுப்புகள்

யாழ்ப்பாணம், அக். 9

உள்ளூராட்சி எழுதுநர் தரம் II - (அ) பரீட்சை, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றுபவர்களுக்கு உதவும் பொருட்டு உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புகள் நாளையும், நாளை மறுதினமும் யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும். [அ-126]

## இடமாற்றம் பழிவாங்கலாம்

யாழ்ப்பாணம், அக். 9

யாழ் கல்விப் பணிப்பாளரால் தமக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மறுக்கும் செயலாகும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்;

தமது இடமாற்றம் தாபன கோவைக்கு முற்றிலும் முரணானது என்றும், அது ஒரு பழிவாங்கல் நடவடிக்கையே என்றும் பொதுச் செயலாளர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சங்கச் செயலாளர் என்ற வகையில் தாம் திணைக்களத்தில் நிர்வாகச் சீர்கேடுகளையும், உத்தியோகத்தர்களின் அதிகார துஷ்பிரயோகங்களையும், ஒழுக்கச் சீர்கேடுகளையும் வெளிக்கொணர்ந்தமைக்கான பழி வாங்கலே இந்த இடமாற்றம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ 28 மாதங்களில் 2,800 படையினர் பலி!
★ காயமுற்ற 5,000 பேர் களத்துக்கு வெளியே!!
★ 4 ஆயிரம் சிப்பாய்கள் தப்பி ஓட்டம்!!!

# ஸ்ரீலங்காப் படைகள் திணறும் நிலையில்!

கொலோன், அக். 9

"விடுதலைப் புலிகளின் அதிகரித்துவரும் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் திணறும் நிலையில் ஸ்ரீலங்காப் படைகள் உள்ளன"

ஜேர்மன் வானொலிக்கு அதன் கொழும்புச் செய்தியாளர் அனுப்பிய செய்திக் கட்டுரை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இராணுவத்தின் மீது புலிகள் நடத்தும் தொடர்ச்சியான தாக்குதல்களினால் படையினர் கொல்லப்படுவது அதிகரித்துக்கொண்டேபோகிறது. மாதாமாதம் சராசரி 100 படையினர் கொல்லப்படுகிறார்கள்.

வடக்கிலும் வடகிழக்கிலும் தனித்துள்ள இராணுவ முகாம்களையும் காவல் நிலைகளையும் புலிகள் தாக்கத் தொடங்கியதே படையினர் தொகையாகக் கொல்லப்படக் காரணம்.

சண்டை தொடங்கிய 1990 ஜூனிலிருந்து 1992 மார்ச் வரையிலான 22 மாத காலப் பகுதியில் சுமார் 2 ஆயிரத்து 150 படையினர் கொல்லப்பட்டனர்.

அதே சமயம்—

1992 ஏப்ரல் தொடங்கி செப்டம்பர் வரையிலான 6 மாத காலப் பகுதியில் சுமார் 650 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

### விலகி ஓடுவோரால் பெரும் பிரச்சினை

படையினர் காயமடைவதும், விலகி ஓடுவதும் இராணுவத்துக்குப் பெரும் பிரச்சினையாக உள்ளது.

கடந்த 2 வருடங்களில் காயமடைந்ததின் காரணமாக 5 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் களத்தைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் பலரும் புலிகளின் நிலக்கண்ணி வெடிகளாலேயே காயமுற்றனர்.

பாதுகாப்புப் படைகளில்—குறிப்பாக இராணுவத்திலிருந்து விலகி ஓடுவோரின் தொகை (குறிப்பாகக் கடந்த 2 மாதங்களில்) அதிகரித்துள்ளதும் இராணுவத்துக்குப் பெரும்இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

1990 ஜூனில் சண்டை மீள ஆரம்பித்த பின்னர் இராணுவத்தைவிட்டு ஓடியவர்களின் தொகை 4 ஆயிரம் இருக்கும் என உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கிழக்கிலும் சிக்கல்

வட — கிழக்கின் ஏனைய பகுதிகளிலுள்ள இராணுவத்தினர் சக்திக்கு மீறி செயலாற்ற வேண்டியுள்ளது.

இதன் காரணமாக வடக்கு கிழக்கில் பரந்துள்ள பல கிராமங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது படையினருக்கு பெரும் சிரமத்தைக் கொடுக்கிறது.

பிரதானமாக புலிகள் இலகுவாக நடமாடும் காட்டுப் பகுதிகளிலுள்ள கிராமங்களைப் பாதுகாப்பது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது.

கடந்த 8 மாதங்களில் கிழக்கு மாகாணத்தில் கிராமங்கள் மீதும் ரோந்துப் படைகள் மீதும் பல வெற்றிகரமான தாக்குதல்களை புலிகள் நடத்தியுள்ளனர்.

நிலைமை வழமைக்குத் திரும்பிய பிரதேசங்கள் என முன்னர் பாதுகாப்புப் படையினரால் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களிலேயே இத்தாக்குதல்கள் நடந்துள்ளன.

இராணுவ ஆட்பலத்தைப் பெருக்கும் நோக்குடன் இராணுவத்தை விட்டு ஓடியவர்களை குறைந்த தண்டனையுடன் மீளவும் சேர்த்துக்கொள்வதென அண்மையில் முடிவு செய்யப்பட்டது.

ஆனால் அதுவும் பலன் தரவில்லை.

புதிதாகபடைக்கு ஆள்திரட்டும் முயற்சியும் வெற்றிதருவதாக இல்லை. — என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[உ-10]

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், அக். 9

கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கான தெரிவுப் பரிசோதனை எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெறும்.

எனவே கொழும்பு செல்ல உள்ளவர்கள், வைத்திய நிபுணர்களின் கடிதங்களுடன் அன்றைய தினங்களில் காலை 9.00 மணிக்குச் சமுகமளிக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். [ஒ-15-17]

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வகுப்புகள்

யாழ்ப்பாணம், அக். 9

புதிய மத்தியஸ்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் பயிற்சி வகுப்புகள் நாளை மறுதினம் முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உதைபந்தாட்ட சட்ட விதிகள் பற்றி அறிய விரும்புவோரும், மத்தியஸ்தர்களாக விரும்புவோரும் இவ்வகுப்புகளில் பங்குபற்றலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[உ-5]

## அவசரகால விதிகளை நீக்க மக்கள் எழுச்சி நடவடிக்கை

### எதிரணிக் கூட்டு முடிவு

கொழும்பு, அக். 8

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்துதல், கோஷமெழுப்புதல் என்பவற்றைத் தடை செய்யும் சட்ட விதிகளை நீக்கக் கோரி, எதிர்க் கட்சிகளின் கூட்டு முன்னணி மக்கள் எழுச்சி நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் கூடிய எதிர்க் கட்சிகளின் ஒன்றிணைந்த குழுவின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் —

எதிர்ப்பு நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும், எப்போது ஆரம்பிக்க வேண்டும் என்பவை குறித்து முடிவு செய்ய இக்குழு இந்த வார மத்தியில் கூட இருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## திறந்த பல்கலைக்கழக மாணவருக்கும் மகாபொல

கொழும்பு, அக். 9

பல்கலைக்கழக மாணவர்களைப் போன்று திறந்த பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மகாப்பொல புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இப்புதிய திட்டத்திற்கமைய திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் 400 மாணவர்கள் நடப்பு கல்வியாண்டில் மகாப்பொல புலமைப்பரிசில் வழங்கப்படுவதற்கு எனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோன்று பல்கலைக்கழகக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மகாப்பொல புலமைப்பரிசில், உதவித்தொகை என்பன வழங்கப்படவுள்ளதாகவும் அறியவருகிறது. [உ-ம]

## சிறந்த தமிழன் விருது எனக்கு சேர வேண்டியதல்ல

### இப்படிக் கூறுகிறார் தொண்டா

கொழும்பு, அக். 9

"சிறந்த தமிழன் விருது எனக்குச் சேர வேண்டியதல்ல. இவ்விருது, இவ்வளவு காலமும் எனது உயர்வுக்கும், மலையக மக்களின் வளர்ச்சிக்கும் பாடுபட்டுழைத்த தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்"— இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

அமைச்சர் மன்சூர், திரு. தொண்டமானை பாராட்டி அளித்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தொண்டமான் முன் கண்டவாறு கூறினார். (த-எ)

## ரூபா 11 லட்சம் மோசடி! முன்னாள் பணிப்பாளர் கைது!!

கொழும்பு, அக். 9

அம்பாறையில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 11லட்சம் ரூபாவுக்கு மோசடி செய்யப்பட்ட சம்பவம் ஒன்று தொடர்பாக கிழக்கு மாகாணத்தின் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் அம்பாறை நீதிவான் எச். டீ. எம். தர்மதாஸா முன்னிலையில் ஆஜரானார்.

சந்தேக நபரை இம்மாதம் 13ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-எ)

### ஆனையிறவுப் பகுதியில் கரையிறங்கி

## 'அண்ணே! அண்ணே!!' என்றவர் இப்போது இராணுவ முகாமில்!

யாழ்ப்பாணம், அக். 9

கடலில் வழி தவறி ஆனையிறவுப் பக்கம் போய் கரையிறங்கிய சமயம் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது —

காணாமற் போனதாகக் கருதப்பட்டவர்களில் ஒருவர் வடக்கில் இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது

கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் — 28 ஆம் திகதி அதிகாலை — ஆலங்கேணியில் இருந்து கிளாலி நோக்கி வந்த படகு ஒன்று பாதை மாறி ஆனையிறவுப் பக்கம் சென்று கரையை அடைந்ததும் —

அதிலிருந்த பயணிகள் இறங்கி, கரையை நோக்கி "அண்ணே! அண்ணே!!" என்று அழைத்தவாறு முன்னேறிய போது கரையிலிருந்த படையினர் அவர்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததும் —

இச்சம்பவத்தில் நான்கு பேர் வரை காணாமல் போனதாகவும் முன்னர் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

இப்படகில் பயணம் செய்து பின்னர் காணாமற் போனதாகக் கருதப்படும் ஒருவர் பற்றியே இப்போது தகவல் கிடைத்திருக்கிறது.

தாவடியைச் சேர்ந்த வியாபாரியான கனகசபை இரத்தினசிங்கம் (வயது 55) என்னும் ஆறு பிள்ளைகளின் தந்தையே இராணுவத்தினரின் பிடியில் சிக்கி முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் அவரது குடும்பத்தினருக்கு நேற்றுத் தகவல் கொடுத்துள்ளனர்.

காணாமற்போன இவரை கண்டுபிடித்து தருமாறு அவரது குடும்பத்தினர் யாழ். அரச அதிபரிடமும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

(உ-3-5)

## மரண அறிவித்தல்கள்

### பத்மநாதன் பத்மராஜன்

(யாழ். வைத்தீஸ்வரா - பழைய மாணவன்)

புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 687/28, மானிப்பாய் வீதி ஒட்டுமடத்திலும் பின்னர் கொழும்பில் வசித்து வந்தவருமாகிய பத்மநாதன் பத்மராஜன் (நியூ சாரதா றேப் சென்ரர்) 8—10—92 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் பத்மநாதன் — தனலட்சுமியின் மூத்த மகனும், வசந்தகுமார் (உதயன் நிறுவனம்), மோகன்ராஜன் (யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம்— ஆண்டு 11), ரஞ்சித்குமார் (யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயம் — ஆண்டு 7) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பத்மநாதன் (தந்தை)

(C/3463)

### V. S. S. K. பிரம்மானாந்தன் (குட்டி மாமா)

(யோக சுவாமிகளின் அடியார்)

சுந்தர்மடம் பலாலி வீதியைச் சேர்ந்த V. S. S. K. பிரம்மானாந்தன் லண்டனில் 4—10—92 சிவபதமெய்தினார். அன்னார் காலஞ்சென்ற V. S. S. K. குமாரசுவாமியின் மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் வரதலக்சுமியின் (லண்டன்) அருமைத் தந்தையும், காலஞ்சென்ற சச்சிதானந்தன் (பட்டயக் கணக்காளர்), டாக்டர் நித்தியானந்தன் (லண்டன்), காலஞ்சென்ற திருமதி கண்மணி கனகரத்தினம், காலஞ்சென்ற திருமதி சத்தியலக்சுமி இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குண்டுமணி மாஸ்ரர், சிவகரன்
(உறவினர்)

(4994)


## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடம்

தகைமைகள் :- 8 ஆம் வகுப்புத் தொடக்கம் க.பொ.த. [உயர்தரம்] வரை.
உயரம் :- 5'-6"
வயது :- 18-30

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேராக சமுகம் தரவும். தபால் மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆண் / பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை,

(B/3462)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org